சென்னை மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் செயல்முறை ஆணை

**முன்னிலை:திரு. கு.வெங்கடேசன்**

துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), சென்னைமண்டலம்

ந.க.எண் 1161 / 2023/அ1 நாள்: 04.10.2023

**பொருள் :** பணியமைப்பு – நேரடி நியமனம் – தொகுதி IV ( 2015 -2016, 2016 – 2017 மற்றும் 2017 – 2018) திரு.சு.மணிவண்ணன், த/பெ.திரு.சுந்தர மூர்த்தி, இளநிலை உதவியாளர் – பணி வரன்முறை செய்தல் – ஆணைகள் பிறப்பிக்கப்படுதல்

பார்வை

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மே.கு.ந.க.51464/2022/பதொ3, நாள். 18.07.2023
2. கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் அவர்களின் கடிதம், ந.க.940/2019/அ1, நாள். 25.09.2023

......

பார்வை (2)இல் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் அவர்களின் கடிதத்தில், திரு.சு.மணிவண்ணன், த/பெ.திரு.சுந்தரமூர்த்தி என்பவரின் சாதி சான்றிதழ் மெய்த்தன்மை உடையது என அறிக்கை பெறப்பட்டதாகவும், இதனை ஏற்றுக் கொண்ட தேர்வாணையம், இவரது பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல், விதிகளுக்குட்பட்டு, வரன்முறை செய்யுமாறு அறிவுறுத்தியதாக பதிவாளர் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், எனவே தனியரின் பணியை விதிகளுக்குட்பட்டு, ஏனைய தகுதிகள் இருப்பின், பணியில் சேர்ந்த நாளில் வரன்முறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், தொகுதி IV தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப்பணியில், சென்னை மண்டல கூடுதல் பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலரின் செயல்முறை ஆணை ந.க.940/2019/அ1, நாள். 03.06.2019-ன் படி இளநிலை உதவியாளராக கூட்டுறவுத் துறையில் பணி நியமனம் செய்யப்பட்டு துணைப்பதிவாளர் (கடன்) அலுவலக கட்டுப்பாட்டில், 13.06.2019 முற்பகல் முதல் அயற்பணியில் பணியாற்றி தற்போது சென்னை மண்டல துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 08.08.2022 முற்பகல் முதல் பணியாற்றி வரும் திரு.சு.மணிவண்ணன், என்பவரின் பணிகள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 1017/PSD – G2 – 2019, நாள். 28.08.2023-இன் படி அரசுப் பணியில் சேர்ந்த நாளான 13.06.2019 முற்பகல் முதல் விதிகளுக்குட்பட்டு வரன்முறை செய்யப்படுகிறது.

கு. வெ 4/10/2023

துணைப்பதிவாளர் ( வீட்டுவசதி )
சென்னை மண்டலம்,
சென்னை-600 010.

2. இவரது பணிவரன்முறை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளையில் 2015 - 2016, 2016 - 2017 மற்றும் 2017 - 2018-ம் ஆண்டுகளுக்கு தேர்வணையத்தால் தொகுதி (4)ன் கீழ் தெரிவு செய்யப்பட்ட பணிகளின் தொடர்பில் நிலுவையுள்ள நீதிப்பேராணை மனுக்களின் இறுதி முடிவுக்கு உட்படட்டது.

3. இவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 13.06.2019 முதல் இவரின் தகுதிகாண் பருவம் தொடங்குகிறது. பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு பணி காலத்தில் இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவத்தை இவர் நிறைவு செய்ய வேண்டும். தகுதிகாண் பருவ காலத்தில் இவரது பணி அல்லது நடத்தை மன நிறைவு அளிக்கவில்லையெனில் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடிவடையும் முன்பே இவரது தகுதிகாண் பருவ காலம் முடிவுக்கு கொண்டு வரப்படும்.

4. தகுதிகாண் பருவ காலத்தில் பவானி சாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியினை இவர் மேற்கொள்ள வேண்டும். அப்பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் தேர்வுகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் .

4.10.2023

துணைப்பதிவாளர் (வீட்டுவசதி)

சென்னை மண்டலம்

உபா
4.10.23

பெறுநர்

திரு.சு.மணிவண்ணன்
இளநிலை உதவியாளர்
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை மண்டலம்
சென்னை - 10

நகல்

1. பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை - 07
2. கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதல் பதிவாளர், சென்னை
3. இருப்புக்கோப்பு